**கவனிக்க**.- *2014.04.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1913 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30

*1913 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 541 |


**கவனிக்க**.- *உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் மற்றும் அரசியலமைப்புக்கான இருபத்துமூன்றாவது திருத்தச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை மற்றும் சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் மொழிப் பரீட்சை -2015 (I)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை மற்றும் சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் மொழி பரீட்சை 2015 (I) ஆனது பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் கண்காணிப்பு, வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் 2015, மே மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் 2015, யூன் மாதம் 7 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள், இரண்டாம் மொழிப் பரீட்சைகள் மற்றும் விசேட ஆங்கில மொழிப் பரீட்சை கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLAS 1 |
| 2 | இலங்கை பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLES |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLSS |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLArS |
| 5 | சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் மொழிப் பரீட்சை | T |
| 6 | இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை | E |
| 7 | மேற்குறிப்பிட்ட பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய ஏனைய சேவைகள் | other |

3. அலுவலர் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கு வெவ்வேறாகவும் வெவ்வேறான அமர்வுகளிலும் தோற்றலாம். ஆயினும் விதித்துள்ள காலப்பகுதியில் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் அத்தியாவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையம் ஊடாக (Online) முறையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk என்பதற்கு பிரவேசிப்பதன் மூலம் மட்டுமேயாகும். இணையத்தளத்தின் பிரதான முகப்புப் பக்கத்தில் வலது பக்கமுள்ள "Apply Online" என்னும் உள்பட்டியல் (menu) இலிருந்து உரிய பரீட்சையினைத் தெரிவுசெய்வதன் மூலம் விண்ணபத்தினை நிரப்புவது சாத்தியமாகும். 2015, ஏப்பிறல் 30 ஆந் திகதி மு. ப. 8.00 மணி தொடக்கம் 2015, மே 15 ஆந் திகதி இரவு 12.00 மணிவரை மட்டுமே விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- முதல் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகைய நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாக கருத்திற்கொள்ள வேண்டும்.

அதன் பின்னரான அமர்வுகளில் அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் :-

முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது மொழிப் பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பித்தால் 1,000 ரூபா செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு மட்டும் விண்ணப்பித்தால் 500 ரூபா செலுத்துதல் வேண்டும்.

இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்கள், இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்றும் அதேவேளை முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சையின் ஒரு பாடத்திற்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்திற்கோ தோற்றினால் 1,000 ரூபா செலுத்துதல் வேண்டும். அது போலவே இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீடசைக்கு மட்டும் தோற்றினால் 500 ரூபாவும், முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றினால் 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

“SLIDA” கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். “SLIDA” கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டு தந்திக் காசுக் கட்டளை விண்ணபத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது “SLIDA” என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் கட்டிடக் கலைஞர் சேவைகளுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, சகல சேவைகளுக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை என்பவற்றுக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்-

இணைய இணைப்பில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது, இணைய இணைப்பில் அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றை பரீட்சார்த்தியின் தனியாள் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இணைய இணைப்பில் (Online) விண்ணப்பத்தினை நிரப்பும்போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் இடம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட முடியும். 2015.04.30 ஆந் திகதியிலிருந்து 2015.05.15 ஆந் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளை வைத்திருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டியதாக இருந்தால் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்படமாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஏதேனுமொரு ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தல்லாத மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்படமாட்டார்.

12. **பரீட்சைத் திட்டம்**.- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள வாறாகும் :-

ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு "எ") :

முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலம் | 01-I |
| | | இலங்கையில் சட்ட முறைகள் | 3 மணித்தியாலம் | 01-II |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலம் | 01-III |
| 2 | நிர்வாகம் | | 3 மணித்தியாலம் | 02-I |
| 3 | பொருளியலும் சமூகவியலும் | | 3 மணித்தியாலம் | 03 |
| 4 | அரச துறையில் நிதி முகாமைத்துவமும் கொள்வனவு வளங்கள் செயற்பாடுகளும் | | 3 மணித்தியாலம் | 02 |

13.1.1 சட்டம் (100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட மூன்று வினாப்பத்திரங்கள் :
முதலாவது (I) வினாப்பத்திரம்.- அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01-I) :

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி அடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் அமைவும் 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பும்
(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சரவை மற்றும் அரச சேவை
(iii) நீதி நிர்வாகம்
(iv) நிர்வாகத்தின் மீதான நீதித்துறைக் கட்டுப்பாடு
(v) அரச கொள்கைகளுக்கான வழிகாட்டி கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்
(vi) கையளியதிகார வழிச்சட்டம்
(vii) அரசினதும் அரச அதிகார சபைகளதும் பொறுப்புக்கள்
(viii) அடிப்படை உரிமைகள்

இரண்டாவது (II) வினாப்பத்திரம்.- இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 01-II) :-

(i) நீதி நிர்வாகம்
(ii) இலங்கையின் சட்ட வரலாறு
(iii) நீதிமன்ற அமைப்பு
(iv) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 6)
(v) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

மூன்றாவது (III) வினாப்பத்திரம்.- குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 01-III) :-

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

பரீட்சார்த்தியொருவர் சட்டம் என்ற பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 35% வீதப் புள்ளிகளையும் மூன்று பாடங்களின் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40% தையும் பெறுதல் வேண்டும்.

12.1.2 நிர்வாகம் (பாட இலக்கம் 02-I-100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) அலுவலகங்கள், வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள்.
(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாங்கள் :
I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.
(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் :

12.1.3 பொருளியலும் சமூகவியலும் (பாட இலக்கம் 03-100 புள்ளிகள்) - இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கும். முதலாவது (I) வினாப்பத்திரம் - பொருளியல்

(i) பெறுமானம், உற்பத்தி விநியோகத்தின் கொள்கைகளின்பால் விசேட கவனத்துடன் பொருளியல் கோட்பாடுகள்
(ii) நிதி, உற்பத்தி மற்றும் விநியோகம்
(iii) இலங்கையின் பொருளாதாரப் பின்னணி மற்றும் இலங்கையின் பொருளாதார கட்டமைப்பிற்கான விசேட கவனத்துடன் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

இரண்டாவது (II) பகுதி - சமூகவியல் :

(i) சமூக அமைவும், அமைப்பாண்மையும் பணிகளும்
(ii) மானிட உறவுகளும், தொகுமங்களும்
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம்
(iv) கிராமிய நகர்ப்புறச் சமூகம்
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
(vi) சமூக கட்டுப்பாடு
(vii) கலாசாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள்

பொருளியலும் சமூகவியலும் பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக்குறைந்தது 40% வீத புள்ளிகளைப் பரீட்சார்த்தியொருவர் பெறுதல் வேண்டும்.

12.1.4 அரச துறையில் நிதி முகாமைத்துவமும் கொள்வனவு வளங்கள் செயற்பாடுகளும் (பாட இலக்கம் 04 - 100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் பாதீட்டு ஆட்சி :

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டிய நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் நோக்கங்களும் ஒதுக்கீட்டு முறைமைகளும்
* எதிர்பாராச் செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசாங்க வருமானம்
* நிதி அமைச்சரின் தத்துவங்களும் தொழிற்பாடுகளும்
* திறைசேரியின் தத்துவங்களும் தொழிற்பாடுகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும்
* அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA)
* அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்கள் ஆகியோரை நியமித்தல் மற்றும் அவர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்கள்/வகைகூறல் மற்றும் பொறுப்புக் கூறலின் தன்மை

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் :

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணுதல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பிடுதலும் மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமான மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல் :

* வீரமொங் (Virement) நடைமுறையினை அமுல்படுத்தல்
* அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்
(vii) பல்வேறு கணக்கீட்டுச் செயற்பாடுகள்
(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்
(ix) அரச பணத்தின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்
(x) அரசாங்கக் கொள்வனவு - வழங்கல் நடைமுறை
* அரசாங்க கொள்வனவு - வழங்கல் பணிக்கோவை
* அரசாங்க கொள்வனவு - வழங்கல் வழிகாட்டிக் கோவை

12.2 இலங்கை பொறியியல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை “III”) :

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடங்கள் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-II |
| 2 | நிதி முறைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-I |
| 3 | திணைக்கள/தாபன முறைமைகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக் கப்படவில்லை | |

ஒவ்வொரு பாடத்தினையும் சித்தியெய்துவதற்கு குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :

12.2.1 நிர்வாகம் (பாட இலக்கம் 02 - II - 100 புள்ளிகள்).- 1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்

12.2.2 நிதி முறைகள் (பாட இலக்கம் 05 - I - 100 புள்ளிகள்).- அத்தியாயம் IX மற்றும் X தவிர 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கான தகுதி விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்

12.3 இலங்கை விஞ்ஞான சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4),

இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4) :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-II |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-III |
| திணைக்கள ஒழுங்குவிதிகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக் கப்படவில்லை | |

12.3.1 நிதி முறைமைகள்.- (பாட இலக்கம் 05 - II - 100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம்

(i) இலங்கையின் நிதிக்கட்டுப்பாடு :

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும்
* நிச்சயமற்ற சந்தர்ப்பங்களுக்கான நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசாங்க வருமானம்
* நிதி அமைச்சரின் தத்துவங்களும் தொழிற்பாடுகளும்
* திறைசேரியின் தத்துவங்களும் தொழிற்பாடுகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் நாயகமும் அவரின் தத்துவங்களும் தொழிற்பாடுகளும்
* பொதுக் கணக்குகள் தொடர்பான குழு (COPA)
* பொது நிறுவனங்கள் தொடர்பான குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்கள் ஆகியோரை நியமித்தல், அவ்வலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் வகிபாகங்களின்/ வகைகூறல் மற்றும் பொறுப்புக்களின் தன்மை

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் :

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணுதல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பிடுதலும் மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமான மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல் :

* வீரமொன் (Virement) நடைமுறையினை அமுல்படுத்தல்
* அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்
(vii) பல்வேறு கணக்கீட்டுச் செயற்பாடுகள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்
(ix) அரச பணத்தின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்
(x) அரசாங்க பெறுகை நடைமுறைகள் :

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக்கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல் கோவை

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.3.2 நிர்வாகம் (பாட இலக்கம் 02-III- 100 புள்ளிகள்) பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :

(i) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் :
I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.

(ii) 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.4 ***சகல சேவைகளுக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சை***.- 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க இலங்கை நிர்வாகச் சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைய முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் இரண்டாம் மொழிப் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட ஆனால் இதுவரை அதனைச் சித்தியெய்த இயலாதுள்ள அலுவலர்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இருமுறை மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படும்.

இப்பரீட்சை எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சை என இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே குறித்த வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் 40% மான புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| இரண்டாவது மொழிப் பரீட்சை- சிங்களம் | 2 மணித்தியாலம் | 06 |
| இரண்டாவது மொழிப் பரீட்சை- தமிழ் | 2 மணித்தியாலம் | 07 |
| இரண்டாவது மொழிப் பரீட்சை- ஆங்கிலம் | 2 மணித்தியாலம் | 08 |

குறிப்பு.- சிங்கள மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி தமிழ் மொழி ஆவதுடன் தமிழ் மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி சிங்கள மொழி ஆகும். ஆங்கில மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமை பெற்ற அலுவலர்கள் தொடர்பில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் தொடர்பான பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

12.5 ***இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை (பாட இல. 09)***.- முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடம் ஒன்றாக ஆங்கிலத்தினைக் கொண்டிராத அலுவலர்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இரு முறை மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படும். (இது இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் கீழுள்ள ஆங்கில விடயமாகும்) :

இப்பாடத்திற்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

*(i)* ***LISTENING & SPEAKING SKILLS***

The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Meeting
- Listening and Note taking skills

*(ii)* ***ENGLISH GRAMMAR***

A suitable level of proficiency on the following forms of grammar in the Spoken and the Written language is expected from the candidate :-

- Tense and Number
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives & Adverbs
- Determiners
- Prepositions

*(iii)* ***WRITING SKILLS***

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Summary writing skills
- Report writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

*(iv)* ***READING SKILLS***

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

13. **இப்பரீட்சை நேரசூசி கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்** :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01-I | 2015.05.23 | 09.00-12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 01-II | 2015.05.23 | 12.30-15.30 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 01-III | 2015.05.24 | 09.00-12.00 |
| | | நிர்வாகம் | 02-I | 2015.05.24 | 12.30-15.30 |
| | | பொருளியலும் சமூகவியலும் | 03 | 2015.05.30 | 09.00-12.00 |
| | | அரச துறையில் நிதி முகாமைத் துவமும் கொள்வனவு வழங்கல் செயற்பாடுகளும் | 04 | 2015.05.30 | 12.30-15.30 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 2 | இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-I | 2015.05.31 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 02-II | 2015.05.31 | 12.30-15.30 |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவை யின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2015.05.31 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2015.05.31 | 12.30-15.30 |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2015.05.31 | 09.00-12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2015.05.31 | 12.30-15.30 |
| 5 | சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் மொழிப் பரீட்சை | இரண்டாவது மொழிப் பரீட்சை - சிங்களம் | 06 | 2015.06.06 | 11.15-01.15 |
| | | இரண்டாவது மொழிப் பரீட்சை - தமிழ் | 07 | 2015.06.06 | 09.00-11.00 |
| | | இரண்டாவது மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | 08 | 2015.06.06 | 01.30-03.30 |
| 6 | இலங்கை நிர்வாக சேவைகளி லுள்ள அலுவலர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பரீட்சை | ஆங்கிலம் | 09 | 2015.06.07 | 09.00-12.00 |

14.

14.1 வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை ஆகிய பாடங்களைச் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும் :

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | சட்டம் | நியாய துரந்தரர் (Barrister), உயர் நீதிமன் றத்தின் வழக்குரைஞர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல் |
| இரண்டாம் மொழிப் பரீட்சை | இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம்<br>இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் முதல் மொழி அல்லது இரண்டாம் மொழியில் சித்தியடைதல்<br>(ii) அரச கரும மொழிகள் திணைக்களத்தின் தொடக்க நிலை அல்லது உயர் மொழி கற்கை நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்<br>(iii) அரச கரும மொழித் திணைக்களத்தின் தொடக்க நிலை அல்லது உயர் நிலை மொழி கற்கைநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விருப்புக்குரிய சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சித்தி யடைதல் |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி யில் சாதாரண சித்தி அல்லது அதற்கு மேல் மட்டத்தில் சித்தியடைந்திருத்தல் |

**குறிப்பு**.- 2012.01.02 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் அவர்களின் நியமனக் கடிதங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க வேறு அரச கரும மொழிகளில் தேர்ச்சியினை அடைந்து கொள்வதன் பொருட்டு இப்பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக தோற்றுவதற்கு கேட்டுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வேறு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

14.2 இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5(ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலுக்கு வரும் திகதிக்கு (2012.07.01 ஆந் திகதிக்கு) முன்னர் முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்த இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

| 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவைப்பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு |
|---|---|
| நிர்வாகம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிர்வாகம்<br>முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவம்<br>இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவம்<br>மற்றும் பெறுகை நடவடிக்கைகள்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| (அ) பொருளியல் அல்லது<br>(ஆ) சமூகவியல்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | பொருளியல் மற்றும் சமூகவியல்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| சட்டம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | சட்டம்<br>முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| ஆங்கிலம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | தொடர்பு மொழி (ஆங்கிலம்) தேர்ச்சி<br>இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை/<br>ஆங்கில மொழி விசேட பரீட்சை |

15. **பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த அல்லது தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் தனியாள் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

16. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, ஏப்பிறல் 17.

4-901

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.